**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ஆம் நாள் திங்கள்கிழமை**
**2057 திருவள்ளுவராண்டு ஆனி திங்கள் 15 ம் நாள்**
**அசல் வழக்குஎண்.124/2024**
**CNR.NO.TNAL05-000192-2024**

1. சிவப்பிரகாசம்,
2. குணச்செல்வி. ...வாதிகள்

//எதிர்//

1. சிலம்பரசன்,
2. நிர்மல்குமார். ...பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக கடந்த 06.06.2026–ம் தேதியன்று வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.V.சிங்காரவேலன் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிய அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், நீதிமன்றத்தில் அழைத்தபோது ஆஜராகாத காரணத்தால் தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், வாதிகள் தரப்பு வாதம் கேட்டும், வாதி தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## தீர்ப்புரை

1. தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையூறு செய்யாமல் இருக்க பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டும் என்று வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**வாதிகளின் வழக்குரையின் சுருக்கம்:**

2. தாவா சொத்துக்கள் புன்செய் விவசாய நிலமாகும், பிரதிவாதிகள் தாவா 1ம் வாதிக்கும் 2ம் பிரதிவாதியின் கணவருக்கும் தம்பி மகன்கள் ஆவார்கள், மேற்படி தங்கவேல் மனைவி பவுனாம்பாள் ஆவார். மேற்படி காமராஜ்,

ராமமூர்த்தி, ராசேந்திரன் சிவப்பிரகாசம், சந்திரசேகரன் செல்வகுமார் என்று 6 பிள்ளைகள் இருக்கின்றனர் என்றும், மேற்படி தங்கவேல் அவரது குடும்ப சொத்துக்களை விட்டு விட்டு இன்டஸ்டேட்டாக இறந்துவிட்டார் என்றும், மேற்படி தங்கவேல் காலத்துக்கு பிறகு அவரது வாரிசுகள் கூட்டுக்குடும்பமாக இருந்து அடிக்கடி சொத்துக்கள் பொறுத்து சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதால் கடந்த 25.07.1986 தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாக அட்டவணை மூலம் பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து பாகம் பிரித்துக்கொண்டு அவரவர் பாகத்தை அவரவர் சர்வசுதந்திர பாத்தியமாய் வரி வாய்தா செலுத்தி ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றும், மேற்படி பாக அட்டவணை படி A ஷெட்டியூல் பவுனாம்பாளும், B ஷெட்டியூல் சொத்துக்களை 1 நபர் காமராஜும், C ஷெட்டியூல் சொத்துக்களை ராமமூர்த்தியும், D ஷெட்டியூல் சொத்துக்களை ராசேந்திரனும், E ஷெட்டியூல் சொத்துக்களை வாதி சிவப்பிரகாசமும், F ஷெட்டியூல் சொத்துக்களை சந்திரசேகரும் G ஷெட்டியூல் சொத்துக்களை செல்வகுமாரும் பாகமாக பெற்றுள்ளனர் என்றும், மேற்படி பாக அட்டவணையில் கண்ட 6 நபர் சந்திரசேகரன் F அட்டவணை சொத்துக்களை பாகமாகவும், 7வது நபர் செல்வக்குமார் G அட்டவணை சொத்துக்களை பாகமாக பெற்றுள்ளார்கள். மேற்படி சந்திரசேகரன் புல எண்.65/9ல் 90 செண்டும், செல்வகுமாருக்கு புல எண்.65/9ல் 20+13 ஆக கூடுதல் 33 செண்டும் பாகமாக கிடைத்துள்ளது என்றும், அதுபோல் சந்திரசேகருக்கு புல எண்.69/1ல் 56 செண்டும், செல்வகுமாருக்கு புல எண்.65/8ல் 17 செண்டும் தாவா சொத்துக்களுக்கு அருகில் பாகமாக கிடைத்துள்ளது என்றும், மேற்படி பிரதிவாதிகள் வாதிகளின் தாவா சொத்துக்களையும் சேர்த்து வாதிகளுக்கு தெரிவிக்காமல் சர்வேயர் வைத்து அளவீடு செய்ததாகவும், பிரதிவாதிகளுக்கு இடம் குறைவாக உள்ளதாகவும், வாதிகளின் இடத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்று கட்ட பஞ்சாயத்து வைத்து வாதிகளை கடுமையாக மிரட்டி தகாத வார்த்தைகளால் திட்டியதால் 1ம் வாதியின் மகன் வினோத்குமார் கடந்த 10.12.2023 அன்று மீன்சுருட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன்

மீதான போலீஸ் விசாரணையில் பிரதிவாதிகளை கடுமையாக எச்சரித்து வாதிகளின் பாக சொத்துக்களில் உள்ள அனுபவத்தில் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றும் எச்சரித்து CSR நகல் வழங்கியும் மனுவை முடித்துள்ளார்கள் என்றும், ஆனாலும் பிரதிவாதிகள் வாதிகளை தாவா சொத்தில் அனுபவம் செய்யவிடப்போவதில்லை என்றும், 2ம் வாதி தனது நிலத்திற்கு விவசாய பணிக்காக ஏர், மாடு மற்றும் விவசாய பொருட்களை எடுத்துச்செல்லவும் மகசூல் எடுத்து செல்லவும் போய் வரவும் பாத்தியமுள்ள C அட்டவணை சொத்து கட்டுப்பட்ட புல எண்.65/2, 65/4, 65/5 சொத்துக்களை செல்வகுமார் கிரையம் பெற்று தற்போது அவரது வாரிசுகள் அனுபவித்து வருவதால் 2ம் பிரதிவாதி 2ம் வாதியை அவரது கிரைய நிலத்தை தாண்டி பயிர் செய்ய விடப்போவதில்லை என்று மிரட்டி வருகிறார் என்றும், ஆனாலும் 2ம் வாதி எப்போதும் போல் போய் வந்து விவசாயம் செய்து வருகிறார் என்றும், மேலும் புல எண்.65/9ல் 33 செண்டை 2ம் பிரதிவாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெறப்போவதாகவும், அதனால் வாதிகள் இடத்தை விட்டு கொடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் வாதிகளை மகசூல் செய்ய விடபோவதில்லை என்றும் கடந்த 30.09.2024 அன்று ஊரில் சொல்லி வந்ததாக வாதிகளுக்கு தெரியவந்துள்ளது என்றும், வாதிகள் எப்போதும் போல் அவரது பாகத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றும், மற்ற பாகதாரர்கள் மேற்படி பாக அட்டவணைப்படி கிடைத்த சொத்துக்களை ஏற்று இதுநாள் வரை அனுபவம் செய்து வரும் நிலையில் பிரதிவாதிகள் இப்போது எவ்வித பூசலும் எழுப்ப இயலாது என்றும், பிரதிவாதிகள் சட்டத்தை மதிக்காதவர்கள், எதையும் செய்ய கூடியவர்கள் என்றும், எனவே தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையூறு செய்யாமல் இருக்க பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், தாவா செலவுத் தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளிடமிருந்து கிடைக்க வேண்டும் என்று வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிய அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகததால் தோன்றாத்தரப்பினரர்களாக தீர்மானிக்கப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளனர்.

4. வாதிகள் தரப்பில் 1ம் வாதி சிவப்பிரகாசம் **வா.சா.1** ஆக விசாரிக்கப்பட்டு, **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 2ம் வாதி குணசெல்வி **வா.சா.2** ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் **வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7** வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதிகளுக்கு தாவா சொத்து பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? இல்லையா ? என்பதை காண்பதேயாகும்.

**<u>பிரச்சனைக்கான தீர்வு :–</u>**

6. 1ம் வாதி மற்றும் 2ம் வாதியின் கணவர் ராஜேந்திரனின் தந்தை தங்கவேல் என்பதும், பிரதிவாதிகள் 1ம் வாதிக்கும், 2ம் வாதியின் கணவருக்கும் தம்பி மகன்கள் ஆவார்கள், மேற்படி தங்கவேல் மனைவி பவுனாம்பாள், மகன்கள் 1. காமராஜ், 2. ராமமூர்த்தி, 3. ராஜேந்திரன், 4. சிவப்பிரகாசம், 5. சந்திரசேகரன், 6. செல்வகுமார் ஆவார்கள். மேற்படி தங்கவேல் அவரது குடும்ப சொத்துக்களை விட்டு விட்டு இன்டஸ்டேட்டாக இறந்துவிட்டதாகவும், அவர் காலத்துக்கு பிறகு அவரது வாரிசுகள் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்து, அடிக்கடி சொத்துக்கள் பொறுத்து சண்டை சச்சரவுகள் ஏற்பட்டதால் பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து கடந்த 25.07.1986ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட பாக அட்டவணை மூலம் பாகம் பிரித்துக்கொண்டு அவரவர் பாகத்தை அவரவர் சர்வசுதந்திர பாத்தியமாய் வரிவாய்தா செலுத்தி அனுபவித்து வருவதாகவும், மேற்படி பாக அட்டவணைப்படி A ஷெட்டியூல் சொத்துக்களை பவுனாம்பாளும், B ஷெட்டியூல் சொத்துக்களை 1ம் நபர் காமராஜும், C ஷெட்டியூல்

சொத்துக்களை ராமமூர்த்தியும், D ஷெட்டியூல் சொத்துக்களை ராசேந்திரனும், E ஷெட்டியூல் சொத்துக்களை வாதி சிவப்பிரகாசமும், F ஷெட்டியூல் சொத்துக்களை சந்திரசேகரும், G ஷெட்டியூல் சொத்துக்களை செல்வகுமாரும் பாகம் பெற்றுள்ளதாகவும், மேற்படி பாக பிரிவனை காலத்தில் சிவப்பிரகாசம், சந்திரசேகரன், செல்வகுமார் ஆகியோர் மைனர்களாக இருந்துள்ளதால் அவர்களுக்குதாய் பவுனாம்பாள் கார்டியனாக இருந்து மைனர்களின் பாக சொத்தை பாதுகாத்து பராமரித்து மைனவர்கள் மேஜரானவுடன் அவர்களிடம் வில்லங்கமின்றி ஒப்புவித்து அதன்படி எல்லா பாகதாரர்களும் அவரவர் பாகத்தை அடைந்து தனிச்சுவாதீனமாக நாளது வரை அனுபவம் செய்து வருவதாகவும், மேற்படி அவர்கள் மேஜர் ஆனதும் அவரவர் பாகத்தை அவரவர் அடைந்து அனுபவித்து வருவதாகவும், மேற்படி பாக அட்டவணை நபர்களில் 1ம் வாதியாகிய சிவப்பிரகாசத்தை தவிர அனைவரும் காலமாகிவிட்டதாகவும், பிரதிவாதிகள் வாதிகளின் தாவா சொத்துக்களை வாதிகளுக்கு தெரிவிக்காமல் சர்வேயர் வைத்து அளவீடு செய்ததாகவும், பிரதிவாதிகள் இடம் குறைவாக உள்ளதாகவும், அதை வாதிகளின் இடத்திலிருந்து கொடுக்கவேண்டும் என்று கட்ட பஞ்சாயத்து வைத்து வாதிகளை மிரட்டி தகாத வார்த்தைகளால் திட்டதால் 1ம் வாதியின் மகன் வினோத்குமார் மீன்சுருட்டி காவல் நிலையத்தில் புகார் அளித்து அதன் மீதான விசாரணையில் பிரதிவாதிகளை வாதிகளின் பாக சொத்துக்களில் உள்ள அனுழுவத்தில் எவ்வித இடையூறம் செய்யக்கூடாது என்றும் எச்சரித்து CSR நகல் வழங்கியும் மனுவை முடித்துள்ளதாகவும், ஆனாலும் பிரதிவாதிகள் வாதிகளின் அனுபவத்தில் இடைஞ்சல் செய்து வருவதால், தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையூறு செய்யாமல் இருக்க பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், வாதிகள் தனது வழக்கை சாட்சிய சான்றாவணம் வழியாக நிரூபித்துள்ளதால் வாதிகளின் வழக்கை அனுமதித்து தீர்ப்பளிக்க

வேண்டும் என வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வாதிட்டார்.

7. ஒரு சொத்தில் ஒரு நபர் நிரந்தர உறுத்துக்கட்டளை பெற வேண்டுமென்றால் இரண்டு சங்கதிகளை நிரூபிக்க வேண்டும். முதலாவதாக, அவர் அச்சொத்தில் உடைமையிலும், அனுபவத்திலும் இருந்து வருவதை நிரூபிக்க வேண்டும். இரண்டாவதாக, அந்த உடைமையையும் அனுபவத்தையும் மற்றொரு நபர் இடையூறு செய்தார் என்பதை நிரூபிக்க வேண்டும். இந்த இரண்டு சங்கதிகளை நிரூபிப்பதன் மூலமாக நிரந்தர உறுத்துக்கட்டளை பெறுவதற்கு அவர் உரிமைபடைத்தவர் ஆகிறார்.

8. மேலும் மாண்பமை உச்சநீதிமன்றம் *Anathula Sudhakar vs. P. Buchi Reddy AIR 2008 SC 2033* என்ற வழக்கில் குறிப்பாக பத்தி 13–ல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்தைப் பற்றி பின்வருமாறு தீர்ப்பளித்துள்ளது.

> *"13. In a Suit for Permanant injuction to restrain the defendant from interfering plaintiff's possessions, the plaintiff will have to establish that as on the date of the suit he was in lawfull possession of the suit property and defendant tried to interfere or disturb such lawful possession. Where the property is a building or building with appurtenant land, there may not be such difficulty in establishing possession. The plaintiff may prove physical or lawful possession, either of himself or by him through his family members or agents or lessess/licensees. Even in respect of a land without structures, as for example an agricultural land possession may be established with reference to the actual use and cultivation. The question of title is not in issue in such a suit, though if may arise incidentally or collaterally".*

9. மேற்கூறிய சட்ட கோட்பாடுகளின்படி பார்க்கையில் இவ்வழக்கில் வாதிகள் தாவா சொத்தினை அனுபவித்து வருகிறார்கள் என்பதனை நிரூபிக்க 1ம் வாதி சிவப்பிரகாசம் வா.சா.1–ஆகவும், 2ம் வாதி குணச்செல்வி வா.சா.2 ஆகவும் விசாரணைக்கு உட்படுத்தி வழக்குரை சங்கதிகளை ஆதரித்து சாட்சியமளித்துள்ளார்கள். மேலும் அவரது சாட்சியத்தை வலுப்படுத்தும் விதமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. அதன்படி கடந்த 25.07.1986ம் தேதியில் தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளுக்கும், வாதிகள் குடும்பத்தினருக்கும் இடையே ஏற்பட்ட பாகபத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், வாதிக்கும், 1ம் பிரதிவாதி மற்றும் மூவர் பெயரில் ஏற்பட்ட கூட்டுப்பட்டா (பட்டா எண்.1634) மற்றும் 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட பட்டா கணினி நகல் (பட்டா எண்.1635) வா.சா.ஆ.2 ஆகவும், 2ம் வாதியின் கணவர் மற்றும் ராஜேந்திரன் மற்றும் நான்கு நபர்கள் பெயரில் உள்ள கூட்டுப்பட்டா கணினி நகல் (பட்டா எண்.1265) வா.சா.ஆ.3 ஆகவும், 10.12.2023ம் தேதியில் மீன்சுருட்டி காவல் நிலையத்தில் 1ம் வாதியின் மகன் வினோத்குமார் பிரதிவாதிகளுக்கு எதிராக கொடுத்த புகார் மனுவிற்கான CSR நகல் வா.சா.ஆ.4 ஆகவும், சர்வே எண்.69/1A மற்றும் இதர சர்வே எண்களுக்கான கூட்டுப்பட்டா கணினி நகல் (பட்டா எண்.244) வா.சா.ஆ.5 ஆகவும், 2வாதியின் கணவர் ராஜேந்திரன் 07.06.2020ம் தேதி இறந்து விட்டார் என்பதனை மெய்பிக்க ராஜேந்திரனின் இறப்பு சான்றிதழை வா.சா.ஆ.6 ஆகவும், ராஜேந்திரனுக்கு 2ம் வாதி குணச்செல்வி என்பவர்தான் ராஜேந்திரன் சொத்திற்கு வாரிசு என்பதை மெய்பிக்க ராஜேந்திரனின் வாரிசு சான்றிதழை வா.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. மேற்கூறிய சான்றாவணங்களை வாதிகளின் முதல் விசாரணையோடு ஒப்பிட்டு பார்க்கையில் 1ம் வாதியின் தந்தை இறப்பிற்கு பின்னிட்டு வாதிகள் வழக்கு சொத்தினை முறையான அனுபவம் செய்து வந்துள்ளனர் என்பது உறுதி ஆகிறது. மேலும் 25.07.1986ம் தேதிய பாகப் பத்திரத்திற்கு பின்னிட்டு வாதிகளே வழக்கு சொத்தினை அனுபவித்து வந்துள்ளனர் என்பது வா.சா.1, வா.சா.2 ஆகியோரின் முதல் விசாரணையில் புலனாகிறது.

11. மேலும் பிரதிவாதிகள் வாதிகளின் அனுபவத்தினை இடையூறு செய்யும் விதமாக பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்குள் அத்துமீறி ஆக்கிரமிக்க முற்பட்டுள்ளனர் என்பதனை வா.சா.1 தனது முதல் விசாரணை வழியாகவும்,

1ம் வாதியின் மகன் வினோத்குமார் 10.12.2023ம் தேதி மீன்சுருட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கான CSR நகல் வா.சா.ஆ.4–ன் வழியாகவும் உறுதி ஆகிறது.

12. வாதிகள் தரப்பு சாட்சியத்தை பொய்பிக்கும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரையோ, குறுக்கு விசாரணையோ செய்யப்படவில்லை. மேற்படி வா.சா.1– மற்றும் வா.சா.2ன் சாட்சியத்தையும், சான்றாவணத்தையும் புறம்தள்ளுவதற்கு எவ்வித காரணமும் இவ்வழக்கில் இல்லை. எனவே, முதலாம் 1ம் வாதி சிவப்பிரகாசம் வா.சா.1 ஆகவும், 2ம் வாதி குணச்செல்வி வா.சா.2 ஆகவும் விசாரித்து சாட்சியமளித்து மேற்படி ஆவணங்களை சான்றாவணங்களாக குறியீடு செய்துள்ளதன் மூலம் தாவா சொத்தானது வாதிகளின் அனுபவத்தில் இருந்து வருவதும், அதில் பிரதிவாதிகள் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ய முற்படுவதும் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, தாவா சொத்தைப் பொறுத்து வாதிகளுக்கு நிரந்தர தடை உறுத்துக்கட்டளை பரிகாரம் அளிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

13. முடிவாக, இந்த வழக்கானது செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்தில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, ஏஜெண்டுகளோ எந்த வகையிலும் அத்துமீறி ஆக்கிரமித்து வாதிகளின் நிம்மதியான அனுபவத்தை இடையறு செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஜுன் திங்கள் 29–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:</u>**

வா.சா.1 – சிவப்பிரகாசம் (1ம் வாதி),

வா.சா.2 – குணசெல்வி (2ம் வாதி).

**<u>வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:</u>**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 25.07.1986ம் தேதியிட்ட பாகப்பத்திரத்தின் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | பட்டா கணினி நகல் (பட்டா எண்கள்.1634, 1635) |
| வா.சா.ஆ.3 | பட்டா கணினி நகல் (பட்டா எண்.1265). |
| வா.சா.ஆ.4 | 10.12.2023ம் தேதியிட்ட மீன்சுருட்டி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கான CSR நகல். |
| வா.சா.ஆ.5 | 26.09.2024ம் தேதியிட்ட பட்டா கணினி நகல் (பட்டா எண்.244). |
| வா.சா.ஆ.6 | 16.07.2020ம் தேதியிட்ட இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல்). |
| வா.சா.ஆ.7 | 22.09.2020ம் தேதியிட்ட வாரிசு சான்றிதழ் கணினி நகல். |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்</u>** – இல்லை

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.